## 2.69 கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சி (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 7 நாள் : 6.1.2000

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் 18.8.99 நாளிட்ட நேர்முக கடித எண்.6599/டியு1.

**ஆணை**

ஊரக வளர்ச்சிப் பிரிவில், பொறியியல் பிரிவில், பணியுரியும் கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகிய பணியாளர்களின் கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயித்து ஆணையிட ஊரக வளர்ச்சி இயக்குநர் படிக்கப்பட்டவையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்தை ஏற்று ஊரக வளர்ச்சிப் பிரிவில் பொறியியல் பிரிவில் பணிபுரியும் காண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகிய பணியாளர்களின் கடமைகளும், பொறுப்புகளும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

### இணைப்பு

#### கண்காணிப்பு பொறியாளரின் (ஊ.வ.இயக்ககம்) கடமைகளும், பொறுப்புகளும்

1. கண்காணிப்பு பொறியாளர் (ஊ.வ) ஊரக வளர்ச்சி இயக்கத்தில் இருந்து பணிபுரிகிறார். இவர் ஊரக வளர்ச்சி துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் திட்ட பணிகளுக்கான தொழில்நுட்ப விவரங்களை முடிவு செய்வதில் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு உதவியாக பணிபுரிவார்.
2. ஊரக வளர்ச்சி துறையில் ஊரக பொறியியல் பிரிவின் பணியாளர்களை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும் இவரே பொறுப்பாவார்.
3. தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அரசால் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக நிறைவேற்றப்படும் பணிகள் சம்பந்தமாக அவ்வப்போது வழங்கப்படும் வழிமுறைகள் மற்றும் அறிவுரைகளை சரியான நேரங்களில் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் வெளியிட வேண்டிய பொறுப்பு அவருடையதாகும்.
4. ஊரக வளர்ச்சித் துறையில் நிறைவேற்றப்படும் பல்வேறு தரப்படுத்தப்பட்ட பணிகளுக்கான வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப குறிப்புகளை தயாரிப்பதும் ஒப்புதல் தருவதும் இவருடைய கடமையாகும்.
5. அரசினால் வரையறுக்கப்பட்ட நிதி கட்டுப்பாட்டின்படி இவருக்கு அனுப்பப்பட்ட மதிப்பீடுகளை பரிசீலனை செய்யவும் தேவையான தொழில்நுட்ப அனுமதி வழங்கவும் இவர் பொறுப்பாவார். மேலும் இவரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளிகளின் அட்டவணை மற்றும் படிவங்கள் தயார் செய்யும் பொறுப்பும் இவரைச் சார்ந்தது.
6. ஊரக வளர்ச்சித் துறையில் நிறைவேற்றப்படும் பணிகள் அனைத்தும் இதற்கென வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு, தொழில்நுட்ப குறிப்புகள் மற்றும் தரத்துடன் நிறைவேற்றப்படுகிறதா என்பதை இவருடைய காலமுறையிலான தல ஆய்வின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.
7. இவர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் தரப்படுத்தப்பட்ட பணிகளுக்குரிய அலகு விலை நிர்ணயிக்கப்பட்ட விவரங்களை சேகரிக்கவும் அவற்றை பரிசீலனை செய்யவும், அவை நிதி கட்டுப்பாட்டின்படி பின்பற்றப்படுகிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும்.
8. இவருடைய காலமுறையிலான ஆய்வின் மூலம் கட்டுமான பொருட்கள் கொள்முதல் செய்வதில் பயன்படுத்துவதில் முறைப்படி திட்டமிடப்பட்டுள்ளதா அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட கட்டுமான பொருட்கள் உரிய தொழில் நுட்பப்படி தரமாக உள்ளதா என்பதையும் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

9. இவர் ஊராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்டத்திலுள்ள கட்டுமான பொருட்களின் இருப்புகளை திடீர் ஆய்வு செய்யவேண்டும். மேலும் இதர துறைகளின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகளையும் ஆய்வு செய்யவேண்டும். உதவி செயற் பொறியாளரால் மேல் அளவு செய்யப்பட்ட பணிகளில் சிலவற்றையும் ஆய்வு செய்யவேண்டும். இது குறித்து ஆய்வு அறிக்கையை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்க வேண்டும்.

10. இவருக்கு சிமெண்ட், இரும்பு கம்பிகள், தார் இருப்பு கதவுகள் மற்றும் ஜன்னல் போன்ற கட்டுமான பொருட்கள் வாங்கப்படும்போது மாவட்ட அளவிலான கொள்முதல் குழுவினால் ஒப்புதல் தரப்பட்ட விலை விகிதம் பற்றிய விவரங்களை சேகரிக்கவும் அதன் தரத்தை (Quality) நிர்ணயிக்கவும் அவற்றை கண்காணிக்கவும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

11. சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், கட்டிடங்கள், நீர் ஆதாரங்கள் போன்ற ஊரக உள்கட்டமைப்பு பற்றிய அத்தியாவசிய புள்ளி விவரங்களை சேகரிக்கவும் அவற்றை புதுப்பித்துக் கொள்ளவும் இவருக்கு பொறுப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

12. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பொறியியல் பிரிவு உபகோட்ட பொறியாளர் பிரிவு, வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் உள்ள தொழில் நுட்ப பொறியாளர் பிரிவு ஆகியவற்றில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சரியாக பராமரிக்கப்படுகிறதா எனவும் தொழில் நுட்ப பிரிவுகள் கட்டுப்பாட்டுடன் இயக்குகிறதா என்பதையும் ஆய்வு செய்து அறிக்கை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்க வேண்டும். எதிர்காலத்தில் தணிக்கைகளில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுமானால் அதற்கு பொறுப்பேற்று அதை சரி செய்வது இவருடைய கடமையாகும்.

13. மாவட்டத்தில் உள்ள இதர தொழில் நுட்ப அலுவலர்களின் மந்தண குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் செயற் பொறியாளர்கள் எழுதுவார்கள் இம்மந்தண குறிப்புகளின் மீதான ஆய்வுரை வழங்கும் அலுவலராக இவர் இருப்பார்.

14. இவை தவிர அரசு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

### செயற் பொறியாளரின் (ஊரக வளர்ச்சி) கடமைகளும் பொறுப்புகளும்

1. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியாற்றும் செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அவர் பணியாற்றுகிற மாவட்டத்தின் ஆட்சித் தலைவருடைய கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் செயல்படுவார். இவருக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகள் மற்றும் திட்டங்களுக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசணைகளை அவ்வப்போது திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களுக்கு வழங்கவும் பணிபுரிகிற மாவட்டத்திற்குள் உள்ளடங்கிய ஊரக பொறியியல் பிரிவில் பணியாற்றும் அனைத்து அலுவலகங்களை கண்காணிக்கவும் அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

2. அரசு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால் அவ்வப்போது வெளியிடப்படும் திட்ட செயல்பாடு குறித்த பல்வேறு அறிவுரைகளின் அடிப்படையில் தேவையான ஆலோசனைகளை தேவையான சமயங்களில் திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்குவது இவர் பொறுப்பாகும்.

3. இவர் திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களால் வெளியிடப்படும் நிர்வாக அனுமதியைத் தொடர்ந்து அவை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள் அவற்றில் அடங்கிய பணிகளை எந்த அலுவலர் மட்டத்தில் தொழில் நுட்ப அனுமதி வழங்க வேண்டும் என உள்ள அரசின் விதிகளை அனுசரித்து பிரித்து அறிய வேண்டும். இவ்வாறு பிரித்தறியப்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை அவரவர் மட்டத்தில் கண்காணித்து அவற்றிற்குரிய தொழில் நுட்ப அனுமதி குறித்த காலத்தில் (30 தினங்களுக்குள்) வழங்கப்படுகிறதா என்பதையும் உறுதி செய்ய வேண்டும். இது குறித்த அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அளிக்க வேண்டும்.

4. ஊரக வளர்ச்சி இயக்குநரால் அவ்வப்போது அனுமதிக்கப்பட்டு வெளியிடப்படும் தரப்படுத்தப்பட்ட பணிகளுக்கான வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப விவர குறிப்புகளின்படி பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை இவர் உறுதி செய்ய வேண்டும். தரப்படுத்தப்படாத இதரப் பணிகள் விவரம் தயாரிக்கப்பட்டு, அவை தொழில் நுட்ப மதிப்பீடுகளின் படியும் தொழில் நுட்ப குறிப்புகளின் படியும் நிறைவேற்றப்படுகின்றனவா என கண்காணிக்க வேண்டும். இது குறித்த அறிக்கை

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் பணிபுரியும் கண்காணிப்பு பொறியாளர் அவர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதிக்குள் அளிக்க வேண்டும்.

5. செயற்பொறியாளருக்கென அவ்வப்போது வெளியிடப்படும் அரசின் நிதி உச்சவரம்பின்படி வரப்பெறும் மதிப்பீடுகளை பரிசீலிக்கவும் அவற்றிற்கு தேவையான தொழில்நுட்ப அனுமதியை குறித்த காலத்தில் வழங்கவும் இவருக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

6. ஊரக வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட வடிவமைப்பு, தொழில்நுட்ப குறிப்புகள் மற்றும் தரத்தின்படி பணிகள் நிறைவேற்றப்படுகிறதா என்பதை தன்னுடைய கால முறையிலான ஆய்வின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

7. இவர் ஒவ்வொரு மாதமும் ரூ.2,00,000/–க்கு மேற்பட்ட மதிப்பீடுகளைக் கொண்ட குறைந்த பட்சம் 5 பணிகளையாவது மேலளவு செய்ய வேண்டும். செயற்பொறியாளருக்கென அவ்வப்போது வெளியிடப்படும் அரசின் நிதி உச்சவரம்பின்படி வரப்பெறும் மதிப்பீடுகளை பரிசீலிக்கவும் அவற்றிற்கு தேவையான தொழில் நுட்ப அனுமதியை குறித்தக் காலத்தில் வழங்கவும் இவருக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

8. இவருடைய கள ஆய்வின்போது உதவி செயற்பொறியாளர் / ஒன்றியப் பொறியாளர் / ஒன்றிய மேற்பார்வையாளர் இவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடுகளின்படி செயல்படுத்தப்படும் பணிகளில் 5 விழுக்காடுக்கு குறையாமல் ஆய்வு செய்யவேண்டும். ஆய்வு அறிக்கையை மாவட்ட ஆட்சியர், கண்காணிப்பு பொறியாளர் ஆகியோருக்கு அளிக்க வேண்டும்.

9. ஊராட்சிகளில் பட்டயப் பொறியாளர்களால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேறுகின்ற மொத்த பணிகளில் குறைந்தபட்சம் 5 விழுக்காடு பணிகளையாவது ஆய்வு செய்ய வேண்டும். ஆய்வு அறிக்கையை மாவட்ட ஆட்சியர், கண்காணிப்பு பொறியாளர் ஆகியோருக்கு அளிக்க வேண்டும்.

10. ஊரக வளர்ச்சித் துறையால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டப் பணிகளுக்கான கட்டுமான பொருட்களுக்கான தேவையினை ஆய்ந்தறியும் பொறுப்பு இவருக்கு நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி மற்றும் ஊராட்சி நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் பணிகளுக்கும் இது பொருந்தும். கட்டுமான பொருட்களின் இருப்பினை மிக உன்னிப்பாக கண்காணித்து அவ்விதமான இருப்பு தேவைக்கு குறையாமல் இருக்கத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்புக் குறையும் நேரத்தில் உடனடியாக கட்டுமான பொருட்களை வாங்கி இருப்பில் வைக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது இவரது பொறுப்பாகும். இது சம்பந்தமாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஒத்துழைப்பு அளிக்காத பட்சத்தில மேல்நடவடிக்கை நேரடியாக எடுக்கலாம்.

11. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இதர துறைகளால் நிறைவேற்றப்படும் பணிகளில் குறைந்தபட்சம் 25 விழுக்காடு பணிகளை ஆய்வு செய்வது இவர் பொறுப்பாகும். ஆய்வு அறிக்கை மாவட்ட ஆட்சியர் / கண்காணிப்புப் பொறியாளர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

12. கோட்டம் மற்றும் மாவட்ட அளவிலான ஊரக பொறியியல் பிரிவில் பராமரிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என தன்னுடைய காலமுறையிலான ஆய்வின்போது கண்காணிப்பதும், குறைபாடுகள் இருப்பின் அது குறித்து நடவடிக்கை எடுப்பதும் இவர் பொறுப்பாகும்.

13. இவர், தனது மாவட்டத்தில் உள்ளடங்கிய அனைத்து வட்டாரங்களிலும் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது திடீர் தணிக்கை செய்து அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட அலுவலருக்கு அனுப்பவேண்டும்.

14. மாவட்டத்தின் கட்டிட மையங்களுக்கான பணிகளை மேற்பார்வையிட்டு அப்பணிகளை ஒருங்கிணைக்கவும் கட்டிட மையத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகளை ஆய்வு செய்யவும் இவருக்கு பொறுப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. கட்டிடமையத்தின் பணி முன்னேற்ற அறிக்கை வரவு செலவு கணக்குகள் அனைத்தும் இவர் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

15. அரசு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் தரப்படுத்தப்பட்ட பணிகளுக்கான (Standard works) அலகு விலையை

நிர்ணயம் செய்யவும் அதற்கான ஒப்புதலை பெற்று தரவும் இவர் பொறுப்பாகிறார்.

16. மாவட்ட கொள்முதல் குழு கொள்முதல் செய்யும் பொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்ய இவர் திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு துணை புரியவேண்டும். இவ்விதம் கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் நடப்புக் குறிப்புகளின்படி உள்ளதா என்று உறுதி செய்யும் பொறுப்பு இவருக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது.

17. ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சிகள் ஆகியவற்றின் பொறுப்பின் மாவட்டத்திற்குள் இருக்கும் சாலைகள், தெருக்கள், சிறுபாலங்கள், பாலங்கள், கட்டிடங்கள் போன்ற ஊரக உள் கட்டமைப்புகளின் விபரம், அவற்றில் நடைபெறும் பணிகளைப் பற்றிய அனைத்து விவரங்களை சேகரிக்கவும் அவற்றில் ஏற்படும் மாற்றங்களை சேகரித்து அவற்றை புதுப்பித்துக் கொள்ளவும், அவற்றை தேவைப்படும் சமயத்தில் திட்ட அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு வழங்கவும் இவர் பொறுப்பாவார்.

18. மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகள் அனைத்தும் நிர்ணயம் செய்யப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உன்னிப்பாக கண்காணிக்கும் பொறுப்பு இவருடையதாகும்.

19. இவருடைய காலமுறை ஆய்வின்போது தல ஆய்வின்போதும் உதவி பொறியாளர், ஒன்றியப் பொறியாளர் மற்றும் பணிமேற்பார்வையாளர் இவர்களால் சமர்ப்பிக்கப்படும் நாட்குறிப்பின்படி பணிகள் செய்யப்பட்டனவா என ஆய்வு செய்வதும் உதவி செயற் பொறியாளர் / உதவி கோட்டப் பொறியாளர் இவர்களால் சமர்ப்பிக்கப்படும் நாட்குறிப்புகளை முறைப்படி ஆய்வு செய்வதும் இவர் பொறுப்பாகும்.

20. இவருடைய ஆய்வின் போதும் கள ஆய்வின்போதும் கண்டறியப்படும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகளை பற்றி உடனடியாக திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விவரம் தெரிவிப்பது இவர் கடமையாகும்.

21. உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) க்கான மந்தண அறிக்கை எழுத வேண்டிய பொறுப்பு இவருக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு இவர் எழுதிய மந்தணக் குறிப்பின் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் மேலொப்பம் செய்வார்.

22. மேற்சொன்னவைத் தவிர அரசு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் நிர்ணயிக்கப்படும் கடமைகளையும் நிறைவேற்றுவது இவரது பொறுப்பாகும்.

### உதவி செயற்பொறியாளரின் (ஊரக வளர்ச்சி) கடமைகளும், பொறுப்புகளும்

1. உதவி செயற் பொறியாளருக்கு (ஊரக வளர்ச்சி) என்று நிர்ணயிக்கப்பட்ட கோட்ட தலைமையகத்திற்குள் இவர் பணிபுரிவார். இவர் ஊரக வளர்ச்சித் துறையில் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகள் / திட்டங்கள் இவை தொடர்பான தேவையான தொழில் நுட்ப விவரங்களை திட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சியர் / செயற்பொறியாளர் இவர்களுக்கு வழங்க பொறுப்பாவார்.

2. இவருக்கு தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோட்டத்தில் அடங்கிய அனைத்து தொழில் நுட்ப பணியாளர்களை கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும், ஒருங்கிணைக்கவும் பொறுப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

3. மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஊரக வளர்ச்சி இயக்குநரால் வரையறுக்கப்பட்ட மாதிரி வரைபடங்களின்படி மதிப்பீடுகளை தயார் செய்யவும் அவைகளுக்கான தொழில் நுட்ப அனுமதியை வழங்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தயாரிக்கப்படும் மதிப்பீடுகள் அனைத்தும் நிர்ணயம் செய்யப்பட்ட அலகு விலையின்படி (Unit Cost) தயாரிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்வதும் இவர் பொறுப்பாகும்.

4. இவருக்கென அரசினால் விதிக்கப்பட்ட நிதி உச்சவரம்புக்குட்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவது பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணைக்கான படிவங்கள் தயாரித்து ஒப்புதல் அளிக்கும் பணியும் இவருடையது.

5. ஊரக வளர்ச்சி இயக்குநரால் அவ்வப்போது வழங்கப்படும் பல்வேறு தரப்படுத்தப்பட்ட பணிகளுக்கான வடிவமைப்பு தொழில்நுட்ப குறிப்புகள் முறைப்படி பின்பற்றப்படுகிறதா என்பதை இவர் கண்காணிக்க வேண்டும்.

6. இவர் பணிபுரியும் கோட்டத்திற்குள்ளடங்கிய அனைத்து வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படும் ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளை தரமுடன் நடைபெற அவற்றை அடிக்கடி பார்வையிட வேண்டும். இதற்கான ஆய்வு அறிக்கைகள் செயற் பொறியாளர் (ஊ.வ) மற்றும் திட்ட அலுவலர்களுக்கு அனுப்பவேண்டும்.

7. ஊரக வளச்சித் துறையால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டப் பணிகளுக்கான தேவைப்படும் கட்டுமான பொருட்களை கணக்கிடுதல், திட்ட அலுவலர்கள் / செயற் பொறியாளர்கள் / மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் பணிகளுக்கும் இது பொருந்தும். வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் உள்ள பல்வேறு கட்டுமான பொருள்களைப் பற்றிய இருப்பு நிலவரத்தினை அவ்வப்போது உன்னிப்பாக கண்காணிக்கவேண்டும்.

8. இவர் காலமுறையான ஆய்வின்மூலம் வட்டார பொறியாளரால் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒன்றியப் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்களால் மேலளவு செய்யப்பட்ட பணிகளில் குறைந்தபட்சம் 25 சதவிகிதம் பணிகளை ஒரு காலாண்டிற்குள் இவர் ஆய்வு செய்ய வேண்டும். இவர் ஆண்டிற்கு 75 சதவிகித பணிகளுக்கு மேலளவு செய்ய வேண்டும்.

9. சிமெண்ட், இரும்பு கம்பிகள், தார், இரும்பு கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இவற்றை கொள்முதல் செய்வதற்கான மாவட்ட அளவிலான கொள்முதல் குழு இதற்கான விலைகளை நிர்ணயம் செய்கிறது. இவ்விதம் நிர்ணயிக்க.படும் விலைகளைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும் மற்றும், தொழில் நுட்ப குறிப்பின்படி வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் இவர் பொறுப்பாவார்.

10. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், கட்டிடங்கள், தெருக்கள் போன்ற ஊரக உள்கட்டமைப்பு பற்றிய விவரங்களையும் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் மேம்பாட்டிற்குத் தேவையான விவரங்கள் ஆகியவற்றை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சியிடமிருந்து சேகரிக்கவும் அவற்றை அவ்வப்போது புதுப்பிக்கவும், தேவைப்படும்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கவும் இவர் பொறுப்பாவார்.

11. கீழ்க்கண்ட பதிவேடுகளைப் பராமரிப்பது இவர் பொறுப்பாகும்.
1) மதிப்பீடு பதிவேடு
2) செயற்பொறியாளருக்கு அனுப்பப்பட வேண்டிய மதிப்பீடுகளின் பதிவேடு
3) பெறப்பட்ட பட்டியல்களுக்கான பதிவேடு
4) அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்களின் பதிவேடு
5) மேலளவு பதிவேடு
6) அங்கீகரிக்கப்பட்ட குவாரிகளின் பதிவேடு

12. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான நில உடமைகளை பார்வையிட்டு அவற்றில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதை உறுதி செய்யவும் தேவைப்படும் பட்சத்தில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளவும் இவர் பொறுப்பாகிறார்.

13. இவருக்குக் கீழ் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஊராட்சிகளில், ஊராட்சியின் பொது நிதியிலிருந்து பட்டய பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கிய பணிகளில் குறைந்த பட்சம் 25 சதவிகிதம் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்பது இவருடைய கடமையாகும்.

14. ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பில் உள்ள பல்வேறு பொருட்களை இருப்புகளை ஒவ்வொரு காலாண்டிலும் ஒருமுறையேனும் சரிபார்க்க வேண்டும். இதற்கான அறிக்கைகளை திட்ட அலுவலர், மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பவும் இவர் பொறுப்பாகிறார்.

15. இவருடைய கோட்டத்திலுள்ள அனைத்து பணிகளையும் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் முடிக்க தேவையான ஒத்துழைப்பு வழங்கவும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தக்க அறிவுரை கூறி பணியை

துரிதப்படுத்தும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

16. ஒன்றிய பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் இவர்களால் சமர்ப்பிக்கப்படும் நாட்குறிப்புகளை ஆய்வு செய்யவும் பணி மேற்பார்வையாளர்களின் நாட்குறிப்புகளையும் மேலோட்டமாக ஆய்வு செய்யவும் இவர் பணிக்கப்படுகிறார்.

17. ஆய்வின்போதும், கள ஆய்வின்போதும் கனவத்திற்குவரும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் பற்றி ஆய்வு முடிந்தவுடன் செயற்பொறியாளர் / திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு விவரம் தெரிவிப்பது இவர் கடமையாகும்.

18. இவை தவிர அரசு மற்றும் இயக்குநர் ஊரக வளர்ச்சித் துறையால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றவது இவரது பொறுப்பாகும்.